பக்கம்.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

அசல் வழக்கு எண்.295/2022

வா.சா.– 1–கண்ணன் , த/பெ.தங்கமுத்து

நாள். 21.04.2026

**வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் பன்னிரண்டாம் வகுப்பு படித்துள்ளேன். நான் விவசாயம், ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேன். பிரதிவாதிககள் தாக்கல் செய்துள்ள எதிருரையை படித்துப் பார்த்துள்ளேன். அந்த எதிருரையில் பிரதிவாதிகள் வேடசந்தூரைச் சேர்ந்த கிருஷ்ணன் மகன் ராஜா என்பவருக்கு பிரதிவாதிகள் எழுதிக் கொடுத்த ஈடுகடன் பத்திரத்திற்கு ஆதரவாக பிரதிவாதிகளால் எழுதப்படாத புரோநோட்டில் கையொப்பம் செய்து கொடுக்கப்பட்ட புரோநோட்டினை பயன்படுத்தியதாக எதிர்வாதம் புரிந்துள்ள விவரம் எனக்கு தெரியும். அந்த புரோநோட்டை தாவா வழக்கில் பயன்படுத்தியதாக எதிருரையில் அவர்கள் சொல்லியுள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். எதிருரையில் மேற்படி வேடசந்தூரைச் சேர்ந்த கிருஷ்ணன் மகன் ராஜா என்பவருக்கு பிரதிவாதிகள் எழுதிக் கொடுத்த ஈடுகடன் பத்திரம் எழுதிக் கொடுத்த விவரம் எதிருரையில் தெரிவித்த பின்புதான் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். ஈடுகடன் பத்திரம் பிரதிவாதிகள் எழுதிக் கொடுத்த விவரம் தாவா வழக்கிற்கு முன்பாக தெரியாதா என்றால் ஆமாம். பிரதிவாதிகள் எதிருரையில் என்னை யார் என்றே தெரியாது என்ற எதிர்வாதம் புரிந்துள்ளார்களா என்றால் ஆமாம். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு வழங்கிய பதில் அறிவிப்பிலும் என்னை யார் என்று தெரியாது என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். தாவா வழக்கிற்கு பின்பு பிரதிவாதிகள் தாக்கல் செய்த இடை நிலை மனுக்களுக்கு நான் மறுப்பு தெரிவித்து பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பதிலுரை மனுவில் கிருஷ்ணன் மகன் ராஜா யார் என்று தெரியாது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா வழக்கில் பிரதிவாதிகள் குறிப்பிட்டு சொன்ன கிருஷ்ணன் மகன் ராஜாவை யார் என்று தெரிந்து கொண்டேனே என்றால் தெரிந்து கொண்டேன். என் அப்பா பெயர் தங்கமுத்து ஆகும். என் அப்பாவின் உடன் பிறந்த சகோதரர்தான் குணமாலை நாடார் என்றால் சரிதான். என் தகப்பனாரின் உடன் பிறந்த சகோதரிதான் லெட்சுமி என்றால் சரியல்ல. என் அப்பாவின் உடன் பிறந்தவர்கள் 4 ஆண்பிள்ளைகள் தான். என் சித்தப்பா குணமாலை நாடாரின் மகன் சீனிவாசன் தாவா புரோநோட்டில் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்றால் ஆமாம். சீனிவாசன் சந்தை வியாபாரம்

பார்த்து வருகிறார். கிருஷ்ணன் மகன் ராஜா என்ன வேலை பார்க்கிறார் என தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. நான் எரியோட்டில் பிறந்தது முதலே குடியிருந்து வருகிறேன். கிருஷ்ணன் மகன் ராஜா வேடசந்தூர் மெயின் ரோட்டில் KRS என்ற மளிகை கடை நடத்தி வருகிறார் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. என் அலைபேசி எண்.8015912938 ஆகும். வேறொரு எண் இல்லை. கிருஷ்ணன் மகன் ராஜா என் நெருங்கிய உறவினர் என்றால் சரியல்ல. கிருஷ்ணன் மகன் ராஜா நடத்தி வருகின்ற மளிகை கடைக்கு அருகிலுள்ள ஜுவல்லர்ஸ் கடையில்தான் நான் மேற்பார்வை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டில் பிரதிவாதிகளுக்கு எவ்வளவு கடன் கொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் ரூ.9 லட்சம் என சொல்லியுள்ளேன். நான் வருமான வரி தாக்கல் செய்ததில்லை. பேன் கார்டு எனக்கு இருக்கிறது. நான் இதுவரை யாருக்காவது கடன் கொடுத்துள்ளேனா என்றால்இல்லை. நான் தாவா புரோநோட்டை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். பொதுவாக புரோநோட் மாதிரி என்னிடம் காண்பிக்கப்படுவது போல் இருக்குமா என்றால் ஆமாம். அந்த மாதிரி புரோநோட் **பி.வா.சா.ஆ.1.** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பொதுவாக புரோநோட்டில் எழுதப்படாத காலி பக்கம் இருக்குமா என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1. புரோநோட்டில் இடது பக்க காலி தாள் கிழிக்கப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பிராது ஆவணப்பட்டியலில் வா.சா.1 ல் எந்த வித வரவும் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உண்மையில் இந்த பிரதிவாதிகள் மேலே சொன்ன கிருஷ்ணன் மகன் ராஜாவுக்கு கையொப்பமிட்டு கொடுக்கப்பட்ட புரோநோட்டில் பின்புறம் வரவு வைக்கப்பட்டிருந்த காரணத்தினாலேயே அதனை தவிர்க்கும் பொருட்டு தாவா புரோநோட்டில் இடது பக்க தாளினை கிழித்து தாவா வழக்கிற்காக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா புரோநோட் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் என் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. புரோநோட் எழுதும் போது 5 நபர்கள் இருந்தார்கள், யார், யார் என்றால் நான், சரோஜினி, மைதிலி ராஜலெட்சுமி, சீனிவாசன், கௌதம் ஆகியோர் இருந்தார்கள். கௌதம் எனக்கு உறவினரா என்றால் நண்பர் ஆவார். அவர் எனக்கு 2 வருடமாக பழக்கம் இருக்கும். அவரும் எரியோட்டை சேர்ந்தவர் தான். எனது பக்கத்து வீட்டுக்காரர். அவர் எலக்ட்ரிசீனியனாக வேலை செய்கிறார். சீனிவாசன் பைனான்ஸ் தொழில் செய்கிறாரா என்றால் இல்லை. அவர் யாருக்காவது கடன் கொடுத்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் 2 பேரும் இரண்டு ரெவின்யூ ஸ்டாம்பில் கையெழுத்து செய்து கொடுத்துள்ளாாகள். எத்தனை கையெழுத்து போட்டார்கள் என்றால் ஒவ்வொரு பிரதிவாதியும் தலா இரண்டு கையெழுத்து போட்டார்கள். வா.சா.ஆ.2. வழக்கறிஞர் அறிவிப்பில் பிரதிவாதிகள் ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்துள்ளார்கள் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் பிரதிவாதிகள் எங்கு வந்து

கையெழுத்து செய்து கொடுத்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் சாட்சிகள் முன்பு எழுதிக் கொடுத்தார்கள் என்ற விவரம் இல்லை என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் அறிவிப்பில் புரோநோட்டை யார் எழுதியது, யார் சாட்சி கையெழுத்து போட்டது என்ற விவரம் உள்ளதா என்றால் இல்லை. நான் கொடுத்த கடனுக்கு ஆதரவாக என்ன ஆவணம் பிரதிவாதிகளிடமிருந்து வாங்கினேன் என்றால் புரோநோட் மட்டுமே வாங்கினேன். வேறு எந்த ஆவணமும் நான் வாங்கவில்லை. 2 பெண்களான பிரதிவாதிகளுக்கு எந்த நம்பிக்கையின் பேரில் நான் கடன் கொடுத்தேன் என்றால் பிரதிவாதிகள் எனது அப்பா காலத்திலிருந்து பழக்கம் என்பதால் பழக்கத்தின் அடிப்படையில் கொடுத்தேன். பிரதிவாதிகளிடம் இதற்கு முன்பு கொடுக்கல், வாங்கல் உண்டா என்றால் என்னிடம் இல்லை, அப்பா காலத்தில் இருந்தது. நான் தாக்கல் செய்த பிராதில் பிரதிவாதிகள் நீண்ட நாட்களாக பழக்கம் என சொல்லியுள்ளதற்கு எத்தனை ஆண்டுகள் பழக்கம் என்றால் 20 ஆண்டுகளாக பழக்கம், 2ம் பிரதிவாதியின் தகப்பனார் பாலசுப்பிரமணியம் கணக்கு பிள்ளையாக வேடசந்தூரில் இருந்ததால் என் அப்பா காலத்திலிருந்து பழக்கம். பாலசுப்பிரமணியன் உயிருடன் இல்லை, 2000ம் வருடமே இறந்து விட்டார். 2ம் பிரதிவாதி என்ன படித்துள்ளார் என்றால் டிகிரி முடித்துள்ளார், குறிப்பாக தெரியாது. அவருக்கு கல்யாணம் ஆகிவிட்டதா என்றால் ஆகிவிட்டது. அவருக்கு கல்யாணமாகி எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்றால் 16 ஆண்டுகள் ஆகிறது. 2ம் பிரதிவாதிக்கு கல்யாணம் எங்கு ஆனது என்றால் பழனி கோவிலில் நடந்தது, ரிசப்சன் பூத்தாம்பட்டியில் நடந்தது. 2ம் பிரதிவாதியின் கணவர் பெயர் தெரியுமா என்றால் தெரியும், அவர் பெயர் புருசோத்தமன் ஆகும். பிரதிவாதிகள் நீண்ட காலமாக நண்பர்கள் என்று சொல்வதும், மேற்சொன்ன விவரங்கள் தவறானது என்றால் சரியல்ல. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் 2ம் பிரதிவாதி ஆன்லைன் டிரேடிங் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதாக சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். 2ம் பிரதிவாதி மேற்சொன்ன தொழில் செய்து வருவதற்கு ஆதாரமாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிராதில் கண்டுள்ள கையெழுத்து என்னுடையதுதான். பிராதை நான் படித்துப் பார்த்துதான் கையெழுத்திட்டேன். பிராதின் 2ம் பக்கத்தில் 4வது பாராவில் 3வது வரியில் 2ம் பிரதிவாதி ஆன்லைன் டிரேடிங் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதாக டைப் செய்து விட்டு அதை பேனாவால் அடித்துள்ளேன் என்றால் சரிதான். அதே பாராவில் 5வது வரியிலும் அதே போல் சங்கதி டைப் செய்யப்பட்டு பேனாவால் அடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலும் 2ம் பிரதிவாதி ஆன்லைன் டிரேடிங் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதாக டைப் செய்து விட்டு அதை அடிக்கவில்லை என்றால் சரிதான். அறிவிப்பிலும் பிரமாண வாக்குமூலத்திலும் 2ம்

பிரதிவாதியின் மேலே சொன்ன தொழில் குறித்து சொல்லி விட்டு அடித்ததற்கு குறிப்பிட்ட காரணம் உண்டா என்றால் குறிப்பிட்ட காரணம் எதுவும் இல்லை. பிரதிவாதிகள் இருவரும் தாவா புரோநோட்டில் கையொப்பம் மட்டுமே செய்துள்ளார்கள் என்றால் சரிதான், கைரேகை இடவில்லை என்றால் சரிதான். பிராதின் 2 வது பக்கம் 4 வது பாரா 11ம் வரியில் பிரதிவாதிகள் தாவா புரோநோட்டில் கையெழுத்து மற்றும் கைரேகை வைத்துள்ளதாக பேனாவில் எழுதப்பட்டுள்ளதா என்றால் சரிதான். மேற்படி வாசகங்கள் தட்டச்சு பிழை என்று பின்னால் தாவாவில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராதில் புரோநோட்டை கௌதம் எழுதியதாகவும், அதில் சீனிவாசன் கையெழுத்திட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி எவ்வளவு நாட்கள் கழித்து பதில் அறிவிப்பு பிரதிவாதிகளிடமிருந்து வந்தது என்றால் 3 மாதம் கழித்து வந்தது. வழக்கறிஞர் அறிவிப்பில் 7 நாட்கள்தான் காலஅவகாசம் கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு கொடுத்த பின்பு 1 மாதம் கழித்து தான் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம். பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு செய்தபின்புதான் மேற்சொன்ன சாட்சிகளை வைத்து தாவா புரோநோட்டை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் பிரதிவாதிகள் தாவா புரோநோட்டை மேற்சொன்ன தேதியில் மேற்சொன்ன சாட்சிகள் முன்னிலையில் எழுதிக் கொடுத்திருக்கும் பட்சத்தில் நான் அனுப்பிய அறிவிப்பில் மேற்சொன்ன விவரங்கள் சொல்லியிருப்பேன் என்றாலும், அதை சொல்லாததால் தாவா புரோநோட்டை பிரதிவாதிகளால் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. என் நிரூபண வாக்குமூலத்திலும், பிராதிலும் என்ன வேலை செய்கிறேன் என சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் எந்த தொழிலும் உண்மையில் செய்யவில்லை என்பதால் மேற்படி கடனை பிரதிவாதிகளுக்கு கொடுக்கும் அளவிற்கு வசதி இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எக்காலத்திலும் கடன் வாங்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு பிரதிவாதிகள் நான் சொல்வது போல் எந்த புரோநோட்டிலும் கையெழுத்து போட்டு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கில் முன் ஜப்தி செய்த மனு செய்தேனா என்றால் ஆமாம், எதற்காக செய்தேன் என்றால் பிரதிவாதிகள் வீட்டை வைத்து கடன் பெற்றதால் அந்த மனு செய்தேன். அவர்கள் வீட்டு பத்திரத்தின் அசலோ, நகலோ என்னிடம் கொடுத்தார்களா என்றால் இல்லை. பிரதிவாதிகளின் வீட்டு பத்திரம் எப்படி எனக்கு வந்தது என்றால் சார்பதிவாளரிடம் நகல் போட்டு வாங்கினேன். நான் பிரதிவாதிகளிடம் கடன் கொடுக்கும் போதே மேற்படி சொத்துக்கள் அவர்களுக்கு இருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவ்வாறு தெரியும் பட்சத்தில் வீட்டின் அசலோ, நகலோ வாங்காமல் எதற்காக கடன் கொடுத்தேன் என்றால் நம்பிக்கையின் அடிப்படையில் கொடுத்தேன்.

பிரதிவாதிகளின் சொத்துக்களுக்கான வில்லங்க சான்று போட்டு பார்த்தேனா என்றால் போட்டு பார்க்கவில்லை. என் சித்தப்பா மகன் சீனிவாசன் கிருஷ்ணன் மகன் ராஜாவிடம் வேலை பார்க்கிறார் என்றால் இல்லை. சீனிவாசனுக்கும், ராஜாவுக்கும் பழக்கம் வழக்கம் இருக்கிறதா என்றால் எனக்கு தெரியாது. ராஜாவின் தூண்டுதலின் பேரில்தான் தாவா வழக்கை தாக்கல் செய்து பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் இருவரும் பெண்மக்கள் என்பதால் அவர்களிடம் பணம் பறிக்கும் நோக்கில் ராஜாவுடன் கூட்டு சேர்ந்து தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படுவது நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வில்லங்க சான்றிதழா என்றால் ஆமாம். அந்த வில்லங்க சான்றிதழை நான் படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை. புரோநோட்டுக்கும் பிரதிவாதிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்பதால் வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை – இல்லை.**</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.04.21 21:44:56 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.